| | |
|---|---|
| விடுநர்:<br>திரு. திரு. ப. ரமேஷ்பாபு B.Sc .,M.A.,B.Ed .,<br>மாவட்டக் கல்வி அலுவலர்,<br>மாவட்டக் கல்வி அலுவலகம்,<br>(தனியார் பள்ளிகள்)<br>வேலூர் – 6. | பெறுநர்:<br>இயக்குநர்,<br>தனியார் பள்ளிகளின் இயக்ககம்,<br>நுங்கம்பாக்கம்,<br>சென்னை – 6. |

ந.க.எண். 515/அ2/2025 நாள்: 06.03.2026

மதிப்பிற்குரிய அம்மையீர்,

பொருள்: தனியார் பள்ளி – CBSE– வேலூர் மாவட்டம் –வேலூர் எலைட் CBSE பள்ளி – தடையின்மை சான்று மற்றும் அங்கீகாரச் சான்று பெற வேண்டி கருத்துரு பணிந்து அனுப்புதல் – சார்பு

பார்வை:
1. அரசாணை எண்:151 பள்ளிக்கல்வி துறை நாள்: 09.09.2022.
2. பள்ளி தாளாளரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு நாள்: 22.08.2025.

வேலூர் மாவட்டம், பாலமதி கிராமம், வேலூர் எலைட் CBSE பள்ளி தடையின்மை சான்று மற்றும் அங்கீகாரச் சான்று பெற சம்பந்தப்பட்ட பள்ளி தாளாளரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டது .

கருத்துருவை பரிசீலனை செய்ததில் பள்ளிக்கு பதிவுபெற்ற அறக்கட்டளை முறையாக உள்ளது. Vels Foundation trust என்ற அறக்கட்டளையின் பெயரில் பள்ளிக்கு நிலம் கிரயம் செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்கு அடிப்படை வசதி குறித்த அனைத்து சான்றுகளும் பெறப்பட்டு நிகழ்நிலையில் உள்ளது.பள்ளியின் அனைத்து அடிப்படை வசதிகளும் பள்ளி நடத்த உகந்த சூழ்நிலையிலுள்ளது.

பள்ளியை 25-08-2025 அன்று என்னால் நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனைத்து அசல் ஆவணங்களும் சரிபார்க்கப்பட்டதில் அனைத்து சான்றுகளும் சரியாக உள்ளது. பள்ளியின் பாதுகாப்பும் , கட்டிட உறுதி தன்மையும்,பள்ளி சூழலும் சரியாக உள்ளதால், 2025-2026 கல்வியாண்டு முதல் LKG முதல் 8ஆம் வகுப்பு முடிய பள்ளிக்கு தடையின்மை சான்று மற்றும் அங்கீகாரச்சான்று வழங்க கருத்துருவை எனது பரிந்துரையுடன் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

மாவட்டக் கல்வி அலுவலர்,
(தனியார் பள்ளிகள்)
வேலூர்.

இணைப்பு:
ஆய்வறிக்கை